உ

சிவமயம்.

இருக்கன்குடி என்னும் திவ்ய க்ஷே[illegible]

தக்ஷணபாகம்

வைப்பாறிருமங் குறத்திருநந்தன

வனத்துள் திருக்கோவில் கொண்டெழுந்தருளிய

சத்தமாதருள்ளொருவரான

மாரியம்மன்மீது

கோவில் விண்ணப்பம்.

இஃது

முல்லைநகரஞ்சமஸ்தான வித்துவான்

மருதநத்தம்

விஸ்வகுரு, மகா-௱-௱-ஸ்ரீ

ரு. சின்னச்சாமி ஆச்சாரியார்,

இயற்றியதை

சாத்தூர்

சுப்பிரமணிய விலாஸ அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை) 1921. (அணா 2.

12 JAN

சிறப்பாயிரம்.

சாற்றுக்கவிகள்.

சிவமயம்.

கொல்லபட்டி ஜமீன்தான சங்கீத சாகித்ய வித்துவான் மகா-ள-ள-ஸ்ரீ

அமுதசுந்தரம் ஆச்சாரியவர்கள் இயற்றியது.

அருசீர்க்கழிநெடில்.

உலகமதிற புகழ்பெருகி வளரிருக்கங்குடி மாரியுமையாள் வாச
மலரடியைத்தின மறவாதிரஞ்சு பயர் வினையகற்றுமவரதிகன்மேற
திலகமெனு விசுவகுல சின்னச்சாமிக்கவிஞன் தெழிவாய்ச்சொன்ன
நலமிகுமிப்பதிகமதைப்பகருவதற் காயிரநாவுமக்கினருமே.

இதுவுமது.

எப்பாரும்புகழிருக்கன்குடி மாரியிணைமலர்த்தாளிறைஞ்சுவோருக்
கொப்பாருமில்லை பவவினையகற்றி மிடிநீக்கி யுண்மை ஞானந்
தப்பாமலருள்புரிவாள் மீது சின்னச்சாமி வித்வான் தமிழாற சொன்ன
விப்பாவாவின் சுவையதனைக்குறுமுனிவன் கேட்டதிகவியப்புற்றானே.

ரெடியார் குமாரர்

கதாப்பிரசங்க முகஹரிதாஸ் மென்ற அழகருசாமி பாகவதரவர்கள்

இயற்றிய.

அருசீர்க்கழிநெடில்.

உயர்பொதியவரையினிலுற்றானகத்தியனுநாணிவுமபர்போற்று
மயனரிவை நாவினிடமாக ஒளித்தாளிந்தவகில மீது
ஜெயமிருக்கன்குடி நகர் வாழ்ந்திலகுதிரிசூலி திருவருட் பிரசாத
நயமுற மருதநகர் சின்னச்சாமி சொற்பதிகரசத்தைக்கேட்டே.

கொல்லபட்டி ஜமீன்தான வித்வான் மகா-ள-ஸ்ரீ

ஏ. ராமசாமிக்கவிராயரவர்கள் இயற்றப்பட்டது.

எண்சீர்க்கழி நெடில்.

கன்னற்றடி கொண்டிழுமபாலர் கதலிவருக்கைக்கனியுருககக்
கசிந்துரசங்கள் திரண்டோடிக்கழனி தனிலே பாய்ந்து மிகச்
செந்நெல்விளையு முல்லை நகர்ச் [illegible] மெல்வேந்தனுழுமகிழுஞ்
சின்னச்சாமிக்கவிவலவன் [illegible] போற்றுந்திரிசூலி.
வன்னமிருந்த இருக்கன்குடி [illegible] மாரியம்மன் மிசை
வழுத்தும்பதிகக்கற்ப[illegible] வண்மை சிறந்த தமிழ்த்தவே
அன்றுரைளகமபதும் [illegible]யணமென்பதனை யவனுவறையான்
அம்போருகனுஞ் சுருதி [illegible] மீதென்றறைவானே.

சாற்றுக்கவிகள்.

இருக்கன்குடி மாரியம்மன் மீது இயற்றிய
பதிகப் பிரபந்தம்
சிறப்புப் பாயிரம்

புதுச்சூரான்குடி

மகா-ள-ள-ஸ்ரீ விசுவகுல ராமலிங்கம் ஆச்சாரியார்.

இயற்றிய

வெண்பா.

கனியுங் கனியுங்கற் கண்டுங்கற் கண்டு
மினியவெலலம் வெல்ல மெனுமால் கனியறுகு
பாப்பனியைப் போற்றுதமிழ்ப் பாவலனுஞ்சின்னயவேள்
பாப்பணிசைத்தமிழைப் பார்த்து.

அருசீர்க்கழிநெடில்.

கற்பனை சொற்பொருள் சிறந்த கவிநாலுஞ் சொல்வல்லோன் கனகநேரு
மற்புயனும் விஸ்வகுல ராமலிங்க வாச்சாரி மகிழுற்றுயந்து
தற்பரமா மாரியம்மன் மேற்பதிச்மாறு கவிசதர்தானல்லச்
சிற்பதிப்பித்துக்கொடுத்துப் புகழ்முழுதுங் கைக்கொண்டான் செகத்தும்
(தே

உ

சிவமயம்.

காப்பு.

வாரேறுங் கொங்கைமுத்து மாரியம்மை மேற்பதிகம்
பேரேறும் பாவுரைக்கப் பேணுவனன் காரொனக்கம்
பத்தானத் தானவனைப் பண்டடர்த்த மான்மருகன்
முத்தானத் தானை முகனை (1.)

சீருலவு செல்வத் திருமாது வீற்றிருக்குங்
காருலவு சோலையிருக் கங்குடியே கூருலவு
மஞ்சக் கரத்தா னரிசோ தரிவிமலை
பஞ்சக் கரத்தாள் பதி (2.)

இந்திரன்பூங் காவனத்தி லேல வளர்ந்தோங்கும்
கந்தமலி சோலையிருக் கங்குடியே நந்துகள
நீலகாத் தான்சபையி னின்று நடம்புரியுஞ்
சூல கரத்தா டொடர்வு (3.)

நாலு திசைவானோர் நாண்மலரைத் தூவுதல்போற்
காலுமலர்ச் சோலையிருக் கருங்குடியே தாலநிகர்
கைமுகனைப் பெற்றநுதற் கண்ணி தவங்காத்த
மைமுகனை வென்றான் மனை (4.)

நற்றவர்க ளோதுமறை நாகணவாய் நாடோறுங்
கற்றுவருஞ் சோலையிருக் கங்குடியே யுற்ற சதுர்
வேதங் கடந்தாள் விமலைமுத்து மாரிபஞ்ச
பூதங் கடந்தாள் புகல் (5.)

மாகனகக் கும்பதன மாநர் படைமாரன்
காகளமார் சோலையிருக் கங்குடியே நாகரிகப்
புள்ளமருந் தாமப் புயத்தா ளனதுபவந்
தள்ளமருந் தாவா டலம் (6.)

தண்டாச் சிறைமயில்வின் சஞ்சரிக்கு மேகமதைக்
கண்டாடுஞ் சோலையிருக்கங்குடியே விண்டசதுர்
தங்கமுகந் தானுடையா டானவரைக்களத்திற்
சிங்கமுனிந் தாடன் செறிவு (7.)

பானம் பருகியிரு பைஞ்சிறைய வண்டினங்கள்
கானமலி சோலையிருக் கங்குடியே மோனருளுந்
தங்கவரு மாதர்த் தாளை மகிடனுயிர்
சிங்கவரு மாதர்த்தாள் சேர்வு (8)

சேம சிகரங் தோகையர்க டாமேமலி
காமனகஞ் சோலையிருக் கங்குடியே யாமுனிய
வெல்லா மதிக்குமரி யேற்றிலையாள் வன்பரிடஞ்
செல்லா மதிக்குமரி சேர்வு (9.)

ஓட்டு மினமெழுமா வொண்டனை மாற்ற நிழல்
காட்டுமலர்ச் சோலையிருக் கங்குடியே நாட்டினிலர்ச்
சித்தஞ் சலித்தார் இருக்கருப்பா யுயிரெனிற்
சித்தஞ் சலித்தாள் செறிவு (10)

மங்கை திருவாய்ந்த மானதி பாகத்தறலாற்
கங்கைநா தனிருக் கங்குடியே தங்க
வருங்கஞ் சமுகத்தார் மாவரு மாருந்
தெருங் கஞ்ச முகத்தா ணில் (11)

அற்பிற் பொலிமடவா ராடவர்மெஞ் ஞானருமை
கற்பிற் பணாருமிருக்கங்குடியே கற்புலியோ
மெல்லா மதிக்குமரி யேற்றிலையாள் வன்பரிடஞ்
செல்லா மதிக்குமரி சேர்வு (12)

பொற்பதும மேனிப் பொருகறை வாரணத்தாற்
கற்பகநேர் சோலையிருக் கங்குடியே யற்புதஞ்சேர்
தங்கவர் மாட்டார் சபைகடனி வீணரிடந்
தங்கவா மாட்டா டலம் (13)

மின்னுமா டக்கொடிகள் மேலோங்கி வானுலவு
கன்னியிசை காவிருக் கங்குடியே பொன்மான்
மதியா னவத்தான வளர்த்துந் துணைவி
மதியா னனத்தாள் பதி (1

பாம்பு படம்போற் பாலல்குலார் தோணர்
காம்புமலி சோலையிருக் கன்குடியே தேம்பதுமத்
துள்ளத் திருக்குடை யாளையன் றிருப்புமனத
துள்ளத் திருக்குடையா ளூர் (15)

மாத சனிபுனுகு பாசந்தன மலருங்
காதங் கமழுமிருக் கன்குடியே போதச்சே
வித்தா ரகவியலே வீட்டி யவருளமே
வித்தா ரகவிமலை வீடு (6)

மென்மல ரம்புகழை மீதுவண்டு கொண்டுமோ
கன் பொருவு சோலையிருக் கன்குடியே வன்பூத
மஞ்சங் களித்தா ளடியேன் றுதிகவியி
னெஞ்சங் களித்தா ளிலே (17)

மஞ்ச குளன்மடவார் வாச மனைதோறுங்
கஞ்சமினை வாழுமிருக் கன்குடியே நெஞ்சமதிற்
சீலக்குறையா மருத மனத்தார்தம்
பாலங் குறையாள் பதி (18)

வானந்தனம் பயிலும் வைப்பாகதி பகந்தேன்
கானங் கனமிருக் கன்குடியே யீனர்
திருக்கு மறையாளிச் சித்தர்புகழ்ந்தோ
திருக்கு மறையாளிலம் (19)

தார்மருட மேந்திச் சசிமான மேவுதலாற்
காரிநிகர் சோலையிருக் கருக்குடியே பீரமவி
நேயகற்ப கத்தார் நிருவிகற்ப யோகர்பணி
தூயகற்ப கத்தா டொடர்வு (20)

தாளிற் புலந்தழுவித் தன்னொன் றணிவாய்க்கு
காளியரோ சகுமிருக் கன்குடியே யோவில்
விமலமுத்து மாரிசந்த மேவுங் குயாசலமா
விமலமுத்து மாரியம்மாள் வீடு (21)

வாழி.

வாழிபுரம் வாழிபறை வாழிதலம் வாழிகடல்
வாழிபலம் வாழிமறை வாழிதிரு வாழிநிதி
வாழிமழை மாரியம்மன் வாழிபதி நீவாழி
வாழிமலை யீந்தாயி வாழியே (22)

காப்பு.

துவளகந்தத்துடி கேரிடை மீறுதுவ தனம்வாய்
பவளதந்தத் தவளமாரி—தன்மிசைப்பாவுரைக்க
கவளதந்தத்து நிக்கைவாரியுண்ட கர்ம்பவள
தவளதந்தத்திபதன கணேசன் சரணைக்கே (23)

வல்ல திரிசூல மாரியம்மை மேற்பதிகஞ்
சொல்லுதற்கு நல்ல துணையாகுஞ் செல்விரதி
மாலு மயனும் வணங்குங் குமாகுரு
வேலுமயி லுங்கடப்பு மே (24)

தொண்ட ருளத்துந் துறமேவா ருளத்துமே
லண்ட ருளத்து மகலாதாட் கொண்டபசும்
பால்வண்ண மேனி திருப் பாமாதுவாக்குதவு
மால்வண்ண ப்பானுன் வழுத்த (25)

தைய லருமைத் தனையரொடு வந்துன்து
செய்யகம லப்பாதஞ் சேவித்தேன் வெய்யகலி
மாற்றிப் புரப்பாள் வாழ்நாளும் பூரணமாய்த்
தேற்றிப் புறப்பாள் தினம் (26)

தினமு நினைகிலேன் சேவித்தும் போற்றேன்
மனமுருகிப் பாவால் வழுத்தேன் நினைப்பொழுது
மென்ன தயவுனக் கேன்மீதுண் டாமிகுனிக்
கன்னிமுத்து மாரியம்மா கா (27)

காற்றடி போலக் கறந்து மனத்துயா
மாற்றாயோ முன்னின் றவலமறத் தேற்றாயோ
பிருந்தவு சோலை யிருக்கங் குடிவாழுஞ்
சுந்தரிநீ நாளுந் துணை (28)

துணையெனக்கு வேலதத் தொல்லுலகி லிலைப்
பணியெனக் குன்னைப் பணியுந் தணிவேதான்
நீயே யெனைபன் னியலுய்ச் செயேல் கவரித்
தாயே தாதேகாக்க கை (29)

தைரியமுந் தேக சுகிக்கபமு நலை
சைவா சமநெறியுந் தந்தின்று முய்விப்பா
யாதி பராபரியே யம்பிகையே நாலு
வேத முடிவே விமலை (30)-

விமல பராபரமாய் மேலாய்த்தனியாய்
நிமல சராசரமாய் நிர்த கமலபதத்
தாளை தரும தயாநிதியே சூலகரத்
தானே யெனையாணி தம் (31)

தம்பமுயிர்க் கெல்லாநீ தானலது வேறில்லை
யிம்பரெனைக் காக்கவுனக் கேதுதடை யம்பிகையே
யோங்காரி மாரியம்மை யுத்தமியே யோதுபகை
நீங்கேயா வண்ணந் திருத்து (32)

திருத்தித் தமிழாலுன் சேவடியைப் போற்றக்
கருத்துவசத் தோகைக் கனிவைப் பொருத்து
மயக்க வலையும் வருந்தும் பலகா
மியக்க வலையும் விட (33)

விடாதனை யேபற்றி வேண்டினே னென்றும்
படாதனபா டெல்லாநீ பார்த்தென்னி டர்தவிர்ப்பாய்
சோலையிருக் கங்குடி வாழ்சுந்தரியே சுந்தமலர்
மாலை யீனுமணியம்மா (34)

மாகமொருக் காலவருவார் வன்பவழத் தன்பமுமெய்
போதுந் தளிர்த்தாளுடை புக்கமுதே நீயவு
செய்யா யெனிலுனிலுந் தேவி மகமாயி
மெய்யா வருளினர் யார் மேல் (35)

மேலறியேன் கீழறியேன் மெய்யறியேன் பொய்யறியேன்
மாலறியேன் பேந்த வழியறியேன் நூலறியேன்
யுன்னை யறிவ தெவ்வா சோங்குமிருக் கங்குடிவா
ழம்மை யெனையாண் டருள் (36)

கார்வாழி வாழிகதிர்மதி வாழி கமலமங்கை
சீர்வாழிவாழி செழுமறை வாழி திரிபுவனத்
தோர்வாழி வாழி மகமாயி வாழி துதிக்குமன்பர்
சேர்வாழி வாழி சராசரம் வாழி யிசைவாழியே (37)

பூங்கா விருக்கன் குடிபொற்கோ விற்பொலிந்த
வோங்காரி மாரியம்மை யுத்தமிமேற் பாங்கான
வெண்பா ரதப்பதிகம் விள்ளுதற்கு முன்மேருக்
கண்டா ரகம்பதித்தோன் காப்பு (38)

வெண்டாரும் வெண்கலையும் வெண்பூணும் வெண்ணீரும்
தண்டாச் சிறப்பணிந்த தாயே புண்டு தனை
மாரியம்மை மேற்பதிகம் வண்ணமசைச்சொற்பொருளுந்
சீருந் தெறிந்தோ திட (39)

பூவே[illegible]கண்ணிவெறும் புன்றூருங் கோள்வினை
நாவேறுஞ் செந்தமிழோர் நானிலத்தி—னெலோவாம
லன்பா ரருண்மாரி யம்மை புகழ் கலந்த
வெண்பாவுங் கொள்வா ரினி (40)

இருக்கன்குடி யெனினு மெவ்வுயிருங் காக்க
விருக்கன் குடியிருப்போ மென்றங் கிருக்குமுத்து
மாரியம்மை யார்பாதம் வாழ்த்தடியாரெண்ணுபல
காரியம்மையாது கதிக்கும் (41)

தந்தைதா யுந்தமருஞ் சற்குருவாய் நீயிருக்க
சொந்த மினியார் துயராற்றச் செந்தமிழைக்
கற்றோர் பாவுங் கமலம் பதத்தாளே
யுற்றே னெனையா ளுதி (42)

கலியு மணுகாது காமவிடாய் நாடா
வலியபகை மாறு மருவி—னலமனமே
யன்னமலி வைப்பா மடுத்த—தலத்திருந்த
சொன்னமே யென்று துதிக்க (43)

அய்யமகற்றி யறிவைப் புகட்டியினி
யுய்யும் படியெனக்கோ ருத்தரவு—செய்வா
டருக்கள் வளர்ந்தோங்கு தண்டலைசூழ் நல்ல
விருக்கங் குடிவாழ் விமலை (44)

வெய்ய பகைபிளக்க மின்னு திரிசூலங்
கையி லிலையோதான் காஞ்சியிலே மைமுகனை
மூர்ந்தடர்த்தாலே முனையிலையோ சிந்தைவைத்து
மைந்த னெனையாள வா (45)

எட்டிரண்டுந் தானறியா பேதையெனையகல
விட்டாற் கொழு கொம்பு வேறில்லை தொட்ட
திரிசூல பாணிபா தேவி பனக
வரிசோ தரிவி மலை (46)

வைப்பாற் வலஞ்சூழு மாஞ்சோலை யாலயத்தில்
வைப்பாயிருந்துலகம் வாழ்விக்கு மொப்பில்லா
கண்ணமுத்து மாரி வரதி திரிசூலி
கணணிமுத்து வைத்தென்னைக் கா (47)

பெண்டே வதைக்கெனப் பேர்கொண்ட வர்க்குமிகக்
கண்டேன் முகத்திரண்டு கண்டாலே கெண்டையெனக்
கண்ணாயிர உடம்பிற் காணு முனக் கண்ணே அருட்
கண்ணாடிப் பார்த்தென்னைக் கா (48)

ஆற்றப் பெருங்கவலை யாற்றிப் பழவினையை
மாற்றாயோ ஞானவழி காட்டித்—தேற்றாயோ
பூக்க மழுஞ்சோலைப் பொன்னிலய மேவுதவப்
பாக்கியமே நானுன் பரம் (49)

அறக்கொடும்மை செய்யா யயர்ந்துங் கனவின்
மறக்க முடியாது வந்து கருத்திருளை
வெல்லுந் திரிசூல மேவுங் கரத்தாளே
யல்லும் பகலென்னை யாள் (50)

எந்த மருங்கிருந் தெப்போதுந் தான் வருவார்
பந்தவினை தாகவிடாய் பாவன்னை—தந்தமுலைப்
பால்போ லருந்தவிரு பானதியைத்தந்த
வாலையே நீயாளு வாய் (51)

எள்ளத் தனையேனு மெப்போதுஞ் சாடாம
லுள்ளங் கவலை யொழித்துவகை—கொள்ளமிக
வாதரிப்பதுன்பார மம்மாவைப் பாலுலவு
மாதலத்து வாழு மணி (52)

அருசீர்சளிநெடில்.

வரத்தானை வணங்குதற்கு வரத்தானைக்காப்பானை மரகதசுக்
தரத்தானைத்தலைந்தருமூ தாத்தானைத்தவளமதி தவழுநான்கு
சிரத்தானை முடிமணிவசிரத்தானையன்பசெல்லாந்துதிக்கும்பஞ்சக்
காத்தானைத்திரிசூலக்காத்தானை யகம்புரமுங்கருதி வாழ்வாம்(33)

வாழி.

இருக்கன் குடிவாழி யீஸ்பரியாள் வாழி
பெருக்குடைய வைப்புநதி பெட்போ—டிருக்குமவை
வாழி புகழ் வாழி வானக் தவங்கல்வி
வாழி யருள் பதிகம் வாழி (54)

காப்பு.

கலித்துறை

பதிகந்தபனன் பவனம் விளைனந் துருப் பானவுமா
பதிக்ந்தருபுனற்பாகதி நேருவைப்பா நதிசூழ்
பதிகந்தாம் பயில் காவிருக்கங்குடிப்பார்வதிமேற்
பதிகந்தமிழிற் சொலநற்கணுத்திபதிதுணையே (55)

வெண்பா.

எண்ணெண் கலைகளிருமூன்று சாத்திரமென்
றுண்ணின்றலவ வுதவுவாள் வெண்ணிலவு
போலவணத்தாள் வேத புத்தகத்தா ளெண்ணுசி
பேலவணத்தா ளினி (56)

நூல்.

மலைபோகுடமோ வெனமார்பிடங் கொண்டு வாய்ந்துயர்ந்த
மூலைமாதர் காமத்தழுந்தா திருக்கு முறுதிமன
நிலைதர நலவேளையிதே பரிதருண
வலைபாதிடு புரந்தூழிருக்கங்குடி யாண்டவளே (57)

இருவினை யொப்புமல் பரிபாக மிசிமருவ
வரம [illegible] தந்து கவலையிலா தெனை வாழ்வித்தருள்
திரைபுள்வாருதி மீதேயாவிற் செழுந்துயில்கூ
ரரிமகிழ் சோதரிமாவிருக்கங்குடி யாண்டவளே (58)

சுருதிகள் பற்பல நின்னியல் பெண்ணிச்சொலமனது
வெருவின தென்னிற்சிறியேன் தெரிந்தெங்ஙனன் விள்ளுவது
கருதியயாவுமினி நான் பெற நற்கருணை செய்வா
யருள்வடிவான விருக்கங்குடி நகராண்டவளே (59)

செவியிரண்டேணி கொப்புக்கடுத்த செயலிலென்றன்
கவிசிறிதும் புகத்தானிலையோ விக்கபடமென்றே
குவிமனமன்றி யெய்த்தேனென்னையாள் தருக்கொம்பர்தொரு
மவுள்மலர் சோலையிருக்கங்குடி நகராண்டவளே (60)

செனவவிராசிப்பிழைந்தவகோள் பிழை செய்துளதே
யெனினவையோடப்பணிப்பதற்குன்னிடத்தேவனுமை
தனமுமினியில்லையோ யென்னையாளத்தவடையென்சொலா
யனகருணைசிவியே யிருக்கன்குடி யாண்டவளே (61)

உடல்பொருளாவி யெனுமிவை மூன்று கொண்டென்னவனை
கிடவலஞ் சூழவு மின்புலைசடாற்றவு மெயருள்வாய்
கடனபதாம்புய மாரியம்மா புவிநாயகிமா
வடலரிவாகன தேவிஇ னிதெயென்னையாண்டருளே (62)

தொண்டாளு நாயகன் றன்னடி யார்கள் குறைகள் செயக்
கண்டாலவைகுணமாகக் கொண்டாளக்கடமையன்றோ
தண்டகச்சிறப்பவரிதாயே கவுரிதனையனென்னை
யண்டாதிருக்கத் தகாதுனக்கார் சொல்வாராண்டவளே (63)

ஈரேழுலகினு மெச்சமயத்தருமெண்ணியுன்னை
நேரேயிருந்தா பணிமாறி தங்குறை நேருனர்க்குத்
தீராதவல்பிணி தீராப்பா யெனதகந்தீர்த்தருள்வா
யாராமஞ்சூழிருக்கன்குடி மாநகராண்டவளே (64)

உனதருளாலடியேற்க்கமை கல்வியுணர்ச்சியனு
தினமுயர்வாயபிவிர்த்தியுண்டாகுஞ் செயறருவாய்
புளமதனல் விதை வித்தினர் நாளும் புரப்பது போ
லனுதின நீ யென்னையா தரிப்பாய்பு வியாண்டவளே (65)

எஞ்சலொன்றின்றின்றி யெழுந்த வெங்காற்றினிடையிலவம்
பஞ்சலைந்தாலெனப்பற்பல நாளும் பலவிடயச்
சஞ்சலந்தாக்கத்தவித்தேனை நீ யித்தறுதிருத்தி
யஞ்சலென்றுளிருக்கன்குடி மாரியென்னாண்டவளே (66)

வாழி.

தருமவாழி சாதமுஞ் சராசரங்கள் வாழியே
விரதம் வாழி கல்வி ஞானம் விபுதராதி வாழியே
கருதுமாதவங்கள் வாழி கமல மாது வாழியே
சுருதி வாழி மாரியம்மன் றொண்டர் வாழி வாழியே (67)

மடதடமாகுடகீள் சோலைமாரியை வாழ்த்துதற்குப்
படதடமாகுடவாடரிவேணிப்பரமன்வளர்
வடகடமாகுட மாயோன மகன்மருமானெனுமுக்
கடதடமாகுடதொந்திகணேசன் கழறுணையே (68)

வேறுவஞ்சித்துறை.

பத்தியு மதியும வித்தையுமுதவின
புத்தகபாணியுத்தமிசாணே (69)

வேறு.

மக்களாக்கு மணற்படு சோச்சியை
யொக்கலீன்றவர்கண்டு வந்தாலெனப்
புக்குசேளவிப் புலமிலென் புன்சொலைத்
தக்ககாவலருஞ் சகிப்பாசரோ (70)

நூல்

மஞ்சிற்கரியகுழல் வாதாடயமன் னுகரஞ்
செஞ்சொற்கனி ககை நேர்முகமுஞ் சிஞ்சிதசதங்கை
விஞ்சித்திகழ் கஞ்சித பதநல்குகமெய்மையெழுத்
தஞ்சிற்பொலி செக மாரியம்மா வுன்னடைக்கலமே (71)

நோயுந் துயரமு மாயா விகற்பமு நூறி நல்ல
வாயுளும் வீரியமுஞ்சுகஞ் செல்வமுமன்புமன்பர்
நேயமதாகத் தொழ விவைநல்கிடு நீலநிறத்
தாயமனோன்மணி மாரியம்மாவுன்னடைக்கலமே (72)

எண்ணுறு தெய்வ முதலுனையன்றியினி யுளதோ
பண்ணுறு சைவாகமுங் கதை பொய் யென்பது புதுமை
தண்ணளிகொண்டெனையாழ் வாய் தநியிதுதசர்தளபத்
தண்ணல் சகோதரி மாரியம்மாவுன்னடைக்கலமே (73)

பெருநெருப்புக்கிரமில்லை யென்பா ரியல்பே யதென்றுந்
திருநாமனக்குற்றமு நீமனங்கொளற் சீர்மையன்றே
மருவியடிபலவுமிப்போதருள் வாயெழுதா
வருமறையுட் பொருளே மாரிதாயுன்னடைக்கலமே (74)

ஏதொரு பாவமு நில்லா துனக்கெதி ரென்னிலென்பாற்
ரதருகர்மமே தெதுகடைக்கணித் தாற்றவை செய்
மாதவிகோங்கலர் சோலைபிற ங்கவிமானமுற்ற
வாதிபரா பரிமாரியம்மா யுனடைக்கலமே (75)

காரணகாரியமுஞ் செயல் செய்விக்கையுந்தெரியுந்
தாரணைமாறிச்சூழல் கறங்காகு மென்றன் மதியைப்
பூரணமாகவனுபூதி ஞானம் புகட்டி நின்ற
னாரணவில்லி யபிராமி நானுன்னடைக்கலமே (76)

மூடப்பாகுணமுற்றுந் திருத்தி யுன்முன்னின் றனைப்
பாடப்பாவத்தின முவந்தேத்தப்பணியருள் வாய்
சூடப்பாவச்சடையோன்மகிழ் பொற் சுடர் சபை நின்
றூடப்பாதபதமாரி நானுன்னடைக்கலமே (77)

தகவெழுலோப மிக வெழு கோபமுந்தாமதமும்
பகலிரவார்கனவினுமே தெருமிலைபாற்கனி
நகுமிரு சீர்பத சேவை தந்தாடலி நாகரிக
வகநகநேர் வந்திரஞ்சிய நானுன்னடைக்கலமே (78)

திருமறை வண்டினம் பாடத்தமிழ்கமள்ந்தேயிலங்க
விருபதபங்கய மென்மனக்கல்விமிலமுவந்தென்றே
முருக விழுந்தருவேகரும்பே சுவை முக்கனியே
யருளொழுகுந்தனிக்கந்தனே யினியுன்னடைக்கலமே (79)

உடன் மனம் வாயுமொருவழி நின்றிடவுன் மகிமை
திடமிகு சீர்மை வருவதென்றேயென்னி னிச்செய்வது
தடமுலையன்னை பிதாகுரு சுற்றஞ் சகலமுநீ
யடறருசூலப் படைமாரியானுன்னடைக்கலமே (80)

வாழி.

மாரி வாழி மறை புகழ் வாழி நற்
காரு வாழி கதிர்மதி வாழியே
சீரு வாழித்திருமறை வாழிநா
சேருவாழி நஸ்யீஸ் பரிவாழியே (81)

காப்பு.

மலர்மலி சோலையிருக்கன்குடி வளர்மாரி தன்மேல்
கலமலி பூந்தமிழ்ப்பாவாற் பதிகம் கவிலுதற்கு
கலசபயோதாவல் லபைபாகனைக்கம்பகுபப
திலகநுதற் போதக முகநாதனைச்சிந்திப்பனே (82)

நூல்.

திருக்கிளர் செம்பொற் பரிபுரஞ் சத்திக்குஞ் சீரடிநற்
குருக்கிளர் சேவையடி யேனுகலந்து கொளவருள்வாய்
பொருகருருவானத்தவருல கததர்பிலத்தர்தொழு
திருக்குமிருக்கன்குடி மாரியென்பதிகத்தவனே (83)

சாலோகவின்ப முதற்பத நான்குந் தரற்குகந்த
நீலோக பண்டி தியா மென் பசிப்பிணி நீக்கறிதோ
மேலோர் புகழிருக்கன்குடி தன்னில் விமானமுற்ற
மாலோனுடப்பிறந்தாளே மரகதமாணிக்கமே (84)

ஓராயிரங்கண்ணிருந்தே யவற்றினி லொன்று கொண்டு
பாராதென்பாலிந்த வண்கண்மை சாதிப்பதுபழகி
கோரமோ தன்மதபாசிதி நீ யென்றி கிலத்தி
லாரகிலுஞ் சொல்வரோவிருக்குடியாள் பவளே (85)

கொஞ்சத்திற் கொஞ்சங்கயேனுனது குணமகிலம
கெஞ்சிற் கொளக்கிடைத்தால் வருநாளு கினைப்பவிதல்லாஞ்
செஞ்சொச்புலவர் தவயோகர்வந்து தினம் பணியு
மஞ்சுற்றுலவு பொளிலிருக்கன்குடி மாதங்கியே (86)

இப்பாருனையலதோர் தெய்வம் வேறொன்றிருக்குதென்றறு
வெப்பே கைகலவிடாயுனக்கர்ளா கினே னுகந்தாள்
தப்பார் விரததவயோகர்யாகத் துறைமருவும்
வைப்பாரிருபாஞ் சூழிருக்கன்குடி வாழ்பவளே (87)

வள்ளத்தனையுன் சித்தமென் பச்சத்தினித்திரிம்பி
யுள்ளக்கவலை யொளி முன்னிருளெனவோடிடுமால்
வள்ளக்கமலப்பொருட்டடையன்னமருவு திருப்
பள்ளப்பழனப்பதியிருக்கன்குடிப்பார்வதியே (88)

நீதான் பராமுகமாயிருந்தாலதினொருபல
கோதானவைகளுனக்கே யெனக்கில்லை கூறுவதேன்
மாதாவினியிடர் தீர்த்தருள் சத்திரமாவனசப்
போதாரவனம் பெருகிருக்கங்குடிப்புத்தமுதே (89)

சிவேசுராசகத்தென்றுமண் விண்ணென்று தேர்ந்து சொல்ல
நாவேவருமச்சுகம் போற் பொருளென்று நானறியேன்
மூவாசகல விதங்களுங்காட்டி யென்முன்றினறருள்
தேவியிருக்கங்குடி நகர் வாழுஞ் செழுந்திருவே (90)

அச்சரம் சொற்பொருள் யாப்பலங் காரமவையுப[illegible]ர்
வச்சவிலக்கணமென்புன் கவியில வழுவினுநீ
பச்சமதாயினியாட் கொளவேணுமிப்பாருலகி
மெச்சுமலர்ப்பதத்தாயே கமல விலோசனியே (91)

சடமிதுசடவதிகாரியிதே யென்று தானறியா
மடமெலி சஞ்சிதமாற்றி மெஞ்ஞானவழி தெறிப்பாய்
குடமுனியாதி முனிவர்கள் மேவள்ளி[illegible] குண்டமுள்
தடமுள சோலை யிருக்கங்குடி வளர்சங்கரியே (92)

சத்துச்சித்தானந்த வாழ்விதுமாயத்தடையிதென்று
புத்திக்கருத்திந்த மாயாமலத்தையும் போக்கி யென்பால்
பத்தித்து ஞான வழி காட்டியுன்றுணைப்பாதமருள்
எத்திக்கும் போற்றுமிருக்கங்குடியிலிருப்பவளே (93)

தருமாதவம்புகழ் கல்வி மெஞ்ஞானந்தனையர்சுகம்
பெருமான்மியந்தன கல்லூழ் நுகர்ச்சி பெருமை நிதி
குருமாகடாச்சந்துணி வழகறிவு நற்கொண்ட சிறந்
திருமால் சகோதரி மாரியம்மாள் பதஞ் சிந்திக்கவே (94

வாழி.

கார்வாழி[illegible]பெரும் [illegible]கள் வாழி நற்கன்னிபுயத்
தார்வாழி முத்தலைச்சூலமும் வாழி தருமமிசைப்
பேர்வாழி நாவலர்வாழி மெஞ்ஞானம் பெருமை புகழ்
சீர்வாழி மாவிருக்கங்குடி வாழி திருவாழியே. (95)

திருப்பதிகம் முற்றிற்று.